**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 210/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW1<br>Defence<br>Court |

Name : Thiru. Kumar

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of July, 2025.

**(A1 to A3 are present)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் </u>:

**<u>முதல் விசாரணை </u>**:

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். வழக்கு சமயத்தில் செம்பரம்பாக்கம். ஜெ.பி. ரோட்வேஸ் என்ற லாரி அலுவலகத்தில் நான் லாரி டிரைவராக பணிபுரிந்து வந்தேன். 12/06/2018ஆம் தேதி என்னிடம்

கிளினராக இருந்த பாலமுருகன், கார்த்திக் ஓட்டலில் சாப்பிடப்போகும் போது வேறு நபர்களோடு பிரச்சனை ஏற்பட்டது. இரவு 10.00 மணிக்கு நான் லாரி ஷெட்டில் இருக்கும்போது லோக்கல் ஆட்கள் வந்து கல்லால் லாரியின் கண்ணாடி மற்றும் செக்யுரிட்டி ரூமை கல்லால் அடித்தார்கள். அந்த சமயம் என்னுடன் பணியாற்றியவர்கள் இருந்தார்கள். நான் ஓனரிடம் சம்பவம் குறித்து கூறிவிட்டு மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். புகாரை மறுநாள் நான் நசரத்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்தேன். அப்போது உரிமையாளர் என்னுடன் இருந்தார். புகாரில் உள்ள கையொப்பம் என் கையொப்பம் தான். புகார் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 04 AA 5280 என்பது லாரியின் பதிவெண்ணாகும். லாரி மற்றும் செக்யூரிட்டி கண்ணாடி உடைத்ததில் ரூபாய் 21,000/.க்கு தேசம் ஆனது. இதுகுறித்து காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

புகாரை நான் தான் எழுதினேனா என்றால் நான் எழுதவில்லை கையொப்பம் மட்டும் என்னுடையது. சம்பவம் நடந்த இடம் நான் பணிபுரிந்தேனா என்றால் நான் லாரி டிரைவராக பணிபுரிந்தேன். நான் டிரைவர் என்பதால் வெளிமாநிலங்களுக்கு லோடு ஏற்றி செல்வேன். நான் கூறிய ஓட்டலில் நிறைய மக்கள் வந்து சாப்பிடுவார்கள் என்றால் சரிதான். ஓட்டலில் பிரச்சனை ஏற்படும்போது நான் சம்பவயிடத்தில் இல்லை. நான் அப்போது ஷெட்டில் இருந்தேன். சம்பவம் எவ்வாறு எனக்கு தெரியவந்தது என்றால் தொலைபேசிமூலமாக எனக்கு தெரியவந்தது. 10.00 மணிக்கு சம்பவம் நடக்கும்போது பொதுமக்கள் நிறைய பேர் இருந்தார்களா என்றால் 5, 6 பேர் இருந்தார்கள். சம்பவம் நடக்கும்போது எனக்கும் எதிரிகளுக்கும் கைகலப்பு ஏற்பட்டதா என்றால் நான் சம்பவம் நடக்கும் நான் Yard உள்ளே இருந்தேன். இரவு 10.00 மணி நேரம் என்பதால் சம்பவயிடம் இருட்டதாக இருந்தது என்றால் மின்சார விளக்கு எரிந்துகொண்டிருந்தது. எந்த

திசையில் இருந்து கல் எறிந்தார்கள் என்றால் கேட்டிற்கு வெளியே இருந்து எறிந்தார்கள். திசை சொல்ல தெரியாது. போலீசாரிடம் மேற்படி நபர்கள் தான் கல் எறிந்தார்கள் என்று எப்போது தெரிவித்தேன் என்றால் மறுநாள் தெரிவித்தேன். சம்பவம் நடந்தது வேறு இடம் என்றாலும் இரண்டாவது சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வேறு நபர்கள் செய்த தவறுகளுக்கு எதிரிகளை சம்பந்தப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 210/2018**

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | |
|---|---|
| Name | : Thiru. Balashankar |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of July, 2025.

**(A1 to A3 are present)**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது திருநெல்வேலி மாவட்டம், ஊத்துமலையில் வசித்து வருகிறேன். நான் சம்பவ காலத்தில் ஜெ.பி. ரோட்வேஸில் செம்பரம்பாக்கத்தில் பணிபுரிந்து வந்தேன். 12/06/2018 அன்று இரவு 8.00 மணிக்கு நான் கார்த்திக்குடன் காமாட்சி ஓட்டலுக்கு

சாப்பிட சென்றேன். அப்போது 2 பேர் வந்து என்னிடம் சண்டை போட்டார்கள். நாங்கள் சாப்பிடாமல் திரும்ப எங்கள் அலுவலகத்திற்கு வந்துவிட்டோம். அங்கு இரவு 10.00 மணியளவில் 4 பேர் வந்தார்கள். லாரி கண்ணாடி மற்றும் செக்யூரிட்டி கண்ணாடிகளை கல்லால் மற்றும் கட்டையால் அடித்து உடைத்தார்கள். எங்களை மிரட்டிவிட்டு சென்றார்கள். கல்லால் எறிந்ததில் குமார் என்பவருக்கு காயம் ஏற்பட்டது. ஓனருக்கு போன் செய்தோம். மறுநாள் காலை நசரத்பேட்டை காவல் நிலையத்தில் குமார் என்பவர் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் ஆவார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.1 குமார் என்பவர் எனக்கு உறவினர் அல்ல. அவர் லாரி டிரைவராக இருந்தார். முதலில் ஓட்டலில் நடந்த சம்பவத்தின் போது குமார் உடனிருந்தாரா என்றால் இல்லை. ஓட்டலில் நிறைய பேர் இருந்தார்களா என்றால் அங்கு அதிகமான நபர்கள் இல்லை, 4, 5 பேர் இருந்திருப்பார்கள். சம்பவயிடத்திற்கு வரும்வழியில் வெளிச்சம் இருக்காது என்றால் அது ஹைவே என்பதால் வெளிச்சம் இருந்தது. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் 13/06/2018அன்று காலை 10.00 மணியளவில் என்னை விசாரித்தார்கள். சம்பவத்தன்று போலீசார் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் நான் மேற்படி நபர்கள் கல்லால் எறிந்தார்கள் என்று போலீஸ் அடையாள அணிவகுப்பு மூலமாக மேற்படி நபர்களை அடையாளம் காட்டினேனா என்றால் இல்லை. அருகில் விசாரித்தோம் அவர்கள் பெயர்களை கூறினார்கள். சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வேறு நபர்கள் செய்த தவறுகளுக்கு எதிரிகளை சம்பந்தப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct
Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 210/2018**

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW3 |
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Paulsingh |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of July, 2025.

**(A1 to A3 are present)**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஹரியானாவில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது பூந்தமல்லி சுமத்திரா நகரில் குடியிருந்து வந்தேன். என் அலுவலகம் செம்பரம்பாக்கத்தில் இருந்தது. ஜெ.பி. ரோடுவேஸ் என்ற பெயரில் அலுவலகம்

வைத்திருந்தேன். 12/06/2018 அன்று இரவு 10.00 மணிக்கு 4, 5 நபர்கள் வந்து என் அலுவலகத்திற்கு வந்து டிரைவருடன் சண்டைபோட்டதாகவும், வண்டியின் கண்ணாடியையும், செக்கியூரிட்டி கண்ணாடியை உடைத்தாதாக டிரைவர் என்னிடம் போனில் கூறினார். மறுநாள் காலை நசரத்பேட்டை காவல் நிலையத்திற்கு சென்று டிரைவர் குமார் புகார் கொடுத்தார். அப்போது நான் உடனிருந்தேன். மொத்தமாக ரூபாய் 21,000/- சேதம் ஆனது. யார் உடைத்தார்கள் என எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியாது. சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். டிரைவர் கூறிதான் தெரியும். டிரைவர் இன்னார் தான் கண்ணாடியை உடைத்தார் என்று பெயர் குறிப்பிட்டு கூறினாரா என்றால் இல்லை. டிரைவர் கேட்டுக்கொண்டதன் பேரில் டிரைவருடன் சேர்ந்து வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வேறு நபர்கள் செய்த தவறுகளுக்கு எதிரிகளை சம்பந்தப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.